பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 03 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு யஷ்வந்த் வர்மா வீட்டில் பணம் கைப்பற்றப்பட்ட விவகாரம் குறித்து மாநிலங்களவைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.
2. இ எஸ் ஐ திட்டம் உத்திரபிரதேசத்தின் மேலும் 15 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
3. வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், மியான்மர் நிலவரம் குறித்து ஐ நா பொதுச்செயலாளரின் சிறப்பு பிரதிநிதி-யுடன் புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.
4. மத்திய அமைச்சரவையின் முன்னாள் செயலாளர் திரு ராஜீவ் கௌபா, நித்தி ஆயோக் அமைப்பின் முழு நேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
5. ஜோர்டானின் அம்மான் நகரில் நடைபெறும் ஆசிய சாம்பியன் மல்யுத்தப் போட்டியின் 87 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் சுனில்குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு யஷ்வந்த் வர்மா வீட்டில் பணம் கைப்பற்றப்பட்ட விவகாரம் குறித்து மாநிலங்களவைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் நேற்று ஆலோசனை நடத்தினர்.

இந்த கூட்டத்தில் அவை முன்னவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா, எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மத்திய அமைச்சர்கள் திரு அர்ஜுன்ராம் மெஹ்வால், திரு எல் முருகன், திரு ஜெயந்த் சௌத்திரி, திரு ராம்நாத் தாக்கூர், திமுக-வின் திரு திருச்சி சிவா, பிஜு ஜனதாதளத்தின் திரு சஸ்மித் பத்ரா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திரு ஜான் பிரிட்டாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாநிலங்களவையில் இந்த பிரச்சினை குறித்து பேசிய திரு ஜக்தீப் தன்கர், இது நாட்டின் இறையாண்மையை பாதிக்கும் மிக முக்கியமான பிரச்சினை என்று கூறினார்.

இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மேற்கொண்ட நடவடிக்கையையும் திரு ஜக்தீப் தன்கர் பாராட்டினார்.

**[]<<<>>>[]**

பேரிடர் மேலாண்மை திருத்தச் சட்ட மசோதா-வுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு மாநிலங்களவையில் நேற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2005 —ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த திருத்தத்தின் மூலம் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் செயல் திறனை மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.
தேசிய அளவிலும், மாநில அளவிலும் பேரிடர் மேலாண்மைக்கான செயல் திட்டத்தை வகுக்க தேசிய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களுக்கு இந்த சட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
புதிய சட்டத்திருத்தத்தின்படி மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த மசோதான மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசின் செயல்பாடுகளால் பேரிடர் மேலாண்மையில் உலகின் முன்னணி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றார்.

**[]<<<>>>[]**

கொதிகலன்கள் மசோதா-2024 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொதிகலன்கள் சட்டம் 1923-க்கு மாற்றாக கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவுக்கு மாநிலங்களவை ஏற்கனவே ஒப்புதல் அளித்த நிலையில், மக்களவையில் நேற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கொதிகலன்களை ஒழுங்குபடுத்தவும், கொதிகலன்களில் வெடிப்பு ஏற்படும்போது மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாக்கவும் புதிய மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் கொதிகலன்கள் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்து ஆய்வு செய்யவும், ஒரே மாதிரியான பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இதில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மாசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் விரிவான ஆலோசனை நடத்தியப்பிறகே இந்த மசோதா கொண்டுவரப்படடதாகக் கூறினார்.

மத்திய அரசு கூட்டாட்சி முறையில் நமபிக்கைக் கொண்டுள்ளதாகவும், மாநிலங்களின் உரிமைகளை பறிப்பது என்ற கேள்விக்கே இடமில்லை என்றும் அவர் கூறினார்.

தொழில் தொடங்குவதை எளிதாக்குவது மற்றும் வாழ்க்கையை எளிதாக்குவது போன்றவற்றை புதிய மசோதா பிரதிபலிப்பதகாவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதலாவது எம் ஆர் ஐ ஸ்கேன் சாதனம் புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் நிறுவப்பட உள்ளதாக அந்த மருத்துவமனையின் இயக்குநர் திரு ஸ்ரீனிவாஸ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த அக்டோபர் மாதம் முதல் இந்த எந்திரத்தின் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட எம் ஆர் ஐ ஸ்கேன்-ஐ பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கான மருத்துவ செலவுகள் குறைவதுடன், இந்த சாதனத்துக்காக வெளிநாடுகளை சார்ந்திருக்கும் நிலை தவிர்க்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

மருத்துவ தொழில்நுட்பத்தில் இந்தியா சுயசார்பு அடைவதற்கும இது உதவிகரமாக இருக்கும் என திரு ஸ்ரீனிவாஸ் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், ஐ நா பொதுச்செயலாளரின் சிறப்பு பிரதிநிதி திருமதி ஜூலி பிஸப்-வுடன் புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது மியான்மர் நாட்டின் அரசியல் நிலவரம், அந்நாட்டிற்கு பொருளாதார ஒத்துழைப்பு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

எல்லைப்பகுதி நிலவரம், அகதிகள் வருகை, உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும் விவாதித்ததாக திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

இ எஸ் ஐ திட்டம் உத்திரபிரதேசத்தின் மேலும் 15 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் உள்ள அம்பேத்கர் நகர், ஹமீர்பூர், கனோஜ் உள்ளிட்ட மாவட்டங்கள் இதில் அடங்கும் என்று அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம் உத்திரபிரதேசத்தில் உள்ள 75 மாவட்டங்களில் 74 மாவட்டங்கள் இ எஸ் ஐ திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்று திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மத்திய அமைச்சரவையின் முன்னாள் செயலாளர் திரு ராஜீவ் கௌபா, நித்தி ஆயோக் அமைப்பின் முழு நேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்திற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஒப்புதல் அளித்துள்ளார்.

1982-ஆம் ஆண்டு ஜார்க்கண்ட் பிரிவு ஐ ஏ எஸ் அதிகாரியான திரு ராஜீவ் கௌபா, ஜார்க்கண்ட் மாநில தலைமைச் செயலாளர், மத்திய உள்துறை செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

[]<<<>>>[]

கடலோர பாதுகாப்பை வலியுறுத்தி மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரின் சைக்கிள் பேரணியை அந்த படைப்பிரிவின் இயக்குநர் திரு எஸ் ஆர் சரவணன் சென்னை மெரினா கடற்கரையில் இன்று காலை தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி செல்லும் இந்த பேரணி இம்மாதம் 31-ஆம் தேதி கன்னியாகுமரியில் நிறைவடையவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் இணை இயக்குநர் திரு அருண்சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

ஆயூஷ்மான் பாரத் - பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் மனநல ஆரோக்கியத்திற்காக 77 ஆயிரத்திற்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்றிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இவர்களது சிகிச்சைக்காக கடந்த 21-ஆம் தேதி வரை 87 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

ஆயூஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் 22 வகையான புதிய மனநல சிகிச்சைகளை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் கடந்த ஆண்டு விரிவான சுற்றறிக்கை ஒன்றை பிறப்பித்திருப்பதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

குஜராத் மாநிலத்தில் பொது சிவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அம்மாநில சட்ட அமைச்சர் திரு ருஷிகேஸ் படேல் தெரிவித்துள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் இதனைத் தெரிவித்த அவர், இதன்மூலம் உத்ராகண்ட் மாநிலத்தைத் தொடர்ந்து பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் இரண்டாவது மாநிலமாக குஜராத் திகழும் என்றார்.

ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்பதை நனவாக்குவதுடன் குஜராத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமநீதி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குஜராத்தில் நீதித்துறை செயல்பாடுகளை விரைவுபடுத்தும் வகையில் ராஜ்கோட், சூரத் மற்றும் வதோதாரா மாவட்டங்களில் புதிதாக மூன்று சமரச தீர்வு மையங்கள் அமைக்கப்படும் என்றும் திரு ருஷிகேஸ் படேல் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் திரு இம்ரான்கான் உள்ளிட்ட அரசயில் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுத்ததற்காக அந்நாட்டு ராணுவ தலைமை தளபதி உள்ளிட்ட உயரதிகாரிகளுக்கு தடை விதிக்கக்கோரி அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இதற்கிடையே அமெரிக்காவிற்குள் புதிதாக நுழையும் அகதிகளை தடுத்து நிறுத்துவதற்கான அதிபர் திரு டொனால்டு ட்டிரம்பின் நடவடிக்கைகளுக்கு அந்நாட்டு மேல்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஜோர்டானின் அம்மான் நகரில் நடைபெறும் ஆசிய சாம்பியன் மல்யுத்தப் போட்டியின் 87 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் சுனில்குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

**[]<<<>>>[]**

இந்தியன் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியின் மூன்றாவது சுற்றுக்கு இந்தியாவின் அனாகத் சிங், ஜோஸ்னா சின்னப்பா, அகன்ஷா சலுன்கே மற்றும் வீர் சோத்ரானி ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 11 ரன் வித்தியாசத்தில் குஜராத அணியை வென்றது.

அகமதாபாத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 243 ரன் எடுத்தது.

அந்த அணியின் ஸ்ரேயாஸ் ஐயர் அதிகபட்சமாக 97 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி ஐந்து விக்கெட் இழப்புக்கு 232 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி குவாஹாத்தியில் இரவு 7-30 மணிக்கு தொடங்குகிறது.

***End of News***